2018 ஜுன் 25]

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இதுகுறித்து விவாதிக்க அனுமதிக்காததால், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், சொல்லுங்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சிக்கு எதிராக, ** மேதகு ஆளுநர் அவர்கள் ** பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிக்காத காரணத்தினால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக நானும் வெளிநடப்புச் செய்கிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் அதெல்லாம் ஒன்றும் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் குழம்பிப்போய் இருப்பீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அதில் உங்களுக்கு ஒன்றும் பிரச்சினையில்லை, உட்காருங்கள்.

6. கவன ஈர்ப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் வட்ட மருத்துவமனை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, சூளகிரியில் வட்ட மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம்” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டம்,வேப்பனஹள்ளி சட்டமன்றத்தொகுதி, சூளகிரியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்படி பகுதி, 2015–2016 ஆம் நிதியாண்டில் வருவாய்த் துறையால் தனி தாலுகாவாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சூளகிரியிலிருந்து 25 கிலோ மீட்டருக்குள் ஓசூர் வட்ட அரசு மருத்துவமனை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ஆகியவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் 108 அவசர சிகிச்சை ஊர்திகள் போதுமான அளவில் பயன்பாட்டில் உள்ளன. தேவையான சமயங்களில், அவற்றின்மூலம் அருகில் உள்ள மேற்படி அரசு மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டு, உரிய சிகிச்சை வழங்கப்படுகிறது. நிருவாகக் காரணங்களுக்காக புதிதாக தாலுகாக்கள் உருவாக்கப்படும்போது, மேற்படி தாலுகாவில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது அரசு வட்டம் சாரா மருத்துவமனையை அப்பகுதி மக்களின் நலன் கருதி, கூடுதல் சிகிச்சை வசதிகளை அந்த வட்டத்திற்குள்ளேயே பெற ஏதுவாக, அரசு வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, அரசால் புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில் 2014–2015 ஆம் நிதியாண்டில் 2 வட்ட மருத்துவமனைகள்,

2018 ஜூன் 25] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

2015–2016 ஆம் நிதியாண்டில் 10 வட்ட மருத்துவமனைகள், 2016–2017 ஆம் நிதியாண்டில் 39 வட்ட மருத்துவமனைகள் என மொத்தம் 51 வட்ட மருத்துவமனைகள் ரூ.89.70 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மீதமுள்ள வட்டங்களில் இதேபோன்று வட்ட மருத்துவமனைகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், இப்பகுதி NH–7–*ல் அமைந்திருப்பதாலும், அதிக விபத்துகள் நடைபெறும் பகுதியாக இருப்பதாலும், பொது மக்களின் நலன் கருதி, விபத்தில் சிக்குபவர்களின் உயிரைக் காப்பாற்ற ஏதுவாக, உடனடியாக சிகிச்சை வழங்கி காப்பாற்ற* (Golden Hour Treatment) *சூளகிரியில் தற்போது தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்*–II–*ன்மூலம் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம்* (Emergency Care Centre) *ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இப்பொருள் குறித்து விவாதிக்க அவசியம் எழவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அறிக்கையைப் படித்துவிட்டு, அதிலிருந்து கேள்வியைக் கேளுங்கள். உங்கள் சௌகர்யத்திற்கு கேள்வி கேட்க வேண்டாம்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சூளகிரியில் புதிதாக ஒரு Emergency Care Centre ஏற்படுத்தவிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நான் வரவேற்று, எங்கள் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், அங்கு அனைத்து வசதிகளுடன்கூடிய தாலுகா மருத்துவமனை அமைத்திட வேண்டும். சூளகிரி மருத்துவமனைக்கு தினந்தோறும் 600, 700 பேர் வெளிநோயாளிகளாக மட்டும் வந்து செல்கின்றனர். மேலும், மாதம் ஒன்றிற்கு 50 முதல் 70 எண்ணிக்கையிலான பிரசவங்கள் நடைபெறுகின்றன. சூளகிரியின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஏறத்தாழ 500 கிராமங்கள் இருக்கின்றன. அங்கிருக்கின்ற அனைவரும் விவசாயத்தை நம்பி வாழும் ஏழை மக்கள், கூலித் தொழிலாளர்கள். இவர்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால், 30 கி.மீ. தொலைவிலுள்ள கிருஷ்ணகிரி அல்லது ஓசூருக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, அங்கு ஒரு முழுமையான தாலுகா மருத்துவமனை வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை, அந்தப் பகுதி மக்களின் கோரிக்கை. அங்கே மருத்துவர்கள் குறைவாக இருக்கிறார்கள்;

மருந்தாளுநர்கள் இல்லை. Scan centre இல்லை. மேலும், Post–mortem செய்யுமளவிற்கு அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டும். Post–mortem செய்ய வேண்டுமானால் கிருஷ்ணகிரிக்குச் செல்ல வேண்டிய நிலைதான் உள்ளது. ஆகவே, அனைத்து வசதிகளுடன்கூடிய தாலுகா மருத்துவமனை ஒன்றினை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–35

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இதுவரை 51 தாலுகா மருத்துவமனைகள் 89 கோடி ரூபாயிலே அறிவிக்கப்பட்டு, செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே 10–வது அறிவிப்பாக, பத்தாவதாக இருந்தாலும் ஒரு முத்தான அறிவிப்பாக, தங்கள் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரியிலே THAI திட்டத்தின்கீழ் விபத்துக் காய சிகிச்சை மையம் அமைக்கப்படும் என்ற நல்ல ஓர் அறிவிப்பை நாம் கொடுத்திருக்கின்றோம். தாங்களும் நன்றி சொன்னீர்கள். இந்தப் பக்கம் ஓசூர் மருத்துவமனை; அதற்கும் இப்போது C.T. Scan வசதிகள் எல்லாம், வழங்கி, மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம், கிருஷ்ணகிரி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் இப்பொழுது M.R.I. Scan வசதிகள் எல்லாம் அறிவிக்கப்பட்டு, மிகச் சிறப்பாக விபத்துக் காய சிகிச்சை மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, தாலுகா மருத்துவமனைக்கு இணையான வசதிகளை இனி வருங்காலங்களில் சூளகிரியில் படிப்படியாக ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

2018 ஜூன் 25]

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் வேப்பனஹள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அங்கேயும் ஒரேயொரு மருத்துவர் மட்டும்தான் பணிபுரிகிறார். அதனால் பக்கத்திலே ஆந்திர மாநிலம், குப்பத்தில் இருக்கின்ற P.E.S. என்கிற தனியார் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள். வேப்பனஹள்ளிக்கு தினந்தோறும் 600 முதல் 700 வரை வெளிநோயாளிகள் வருகிறார்கள். ஒரேயொரு மருத்துவர்தான் இருக்கிறார். அங்கே போதிய மருத்துவர்கள் கிடையாது. 30 படுக்கைகள் இருக்கின்றன; ஆனால் 15 படுக்கைகள்தான் உபயோகத்தில் இருக்கின்றன. செவிலியர்கள் இல்லை; துப்புரவுப் பணியாளர்கள் இல்லை. அதேபோல, இராயக்கோட்டை பகுதி ஒரு மையப் பகுதி. அங்கேயும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. அங்கேயும் போதிய மருத்துவர்கள் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்கு தனிக் கவனம் செலுத்தி, தயவுகூர்ந்து இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய மருத்துவர்களை நியமித்திட வேண்டும். மேலும், உபயோகிக்க முடியாமல் இருக்கின்ற 15 படுக்கைகளுக்கும் வேண்டிய உபகரணங்களை வழங்கி, அவற்றையும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது தொகுதியின்மீது தனிக் கவனம் செலுத்திய காரணத்தினால்தான், மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட 108 அறிவிப்புகளிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தனி அறிவிப்பாக, 10–வது அறிவிப்பினை அவரது தொகுதிக்கு வழங்கியிருக்கிறது; இது ஒன்று.*

இரண்டு; தாங்கள் அங்கு மருத்துவர்கள் இல்லை; ஒரு மருத்துவர்தான் இருக்கிறார்; 30 படுக்கைகளில் 15 படுக்கைகள் செயல்படவில்லை என்றெல்லாம் சொல்கிறீர்கள். அந்தக் கருத்துகளையெல்லாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் தயவுசெய்து அந்த மருத்துவமனையைத்

தற்போது நேரில் ஆய்வு செய்யுங்கள். அதாவது, பொது சுகாதாரத் துறையில், மருத்துவர் பணியிடங்களை 100 சதவிகிதம் நிரப்பி, zero percent vacancy என்ற நிலையை நாம் தற்போது எட்டியிருக்கின்றோம். ஆறு மருத்துவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் ஆறு மருத்துவர்கள் இருக்கிறார்கள்; இரண்டு மருத்துவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் இரண்டு மருத்துவர்கள் இருப்பார்கள். ஒரு மருத்துவர் என்றால், இப்பொழுது அவர் counselling–ல் அந்த இடத்தை எடுத்திருப்பார். அவர் join பண்ணாமல் இருப்பார்; அவர் join செய்வதற்கும் time இருக்கிறது. 15 நாட்களுக்குள்ளாக அவர் அங்கு சேர வேண்டுமென்றும், சேர்ந்த பின்னர் சேர்க்கை கடிதம் கொடுக்க வேண்டும் என்றும் இருக்கிறது. ஆக, இதுபோன்ற நிகழ்வுகள்தான் இருக்குமேயொழிய, நிச்சயமாக மருத்துவர்கள் இல்லை என்ற நிலை இல்லை. கடந்த 6 ஆண்டுக் காலத்தில் மருத்துவத் துறையில் 23,880 பேர்கள் MRB மூலமாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதில் 10,888 மருத்துவர்களை நியமனம் செய்திருக்கிறோம். தொடர்ந்து இப்பொழுதும் 1,500 மருத்துவர்களையும், 4,000 செவிலியர்களையும் தேர்ந்தெடுப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. தாங்கள் குறிப்பிடுகின்ற வேப்பனஹள்ளி தொகுதியிலுள்ள மருத்துவமனைகளையும் அரசு கவனத்திலேகொள்ளும்; உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016–2018 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தைந்து முதல் இருபத்தொன்பது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.